ஒவ்வாமை எதிர்வினைகள் (அனாபைலேக்சிஸ்):

தாமதமாகச் சிகிச்சை பெறுவது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம்.*

இது என்ன என்பதை அறிந்துகொள்ளவும்.

கடுமையான ஒவ்வாமை எதிர்வினை என்பது தீவிரமான, உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஓர் ஒவ்வாமை எதிர்வினையாகும். இது குறிப்பிட்ட வகையான உணவுகள் (நிலக்கடலை மற்றும் ஓடு உள்ள நீர் வாழினங்கள் போன்றவை), பூச்சிக் கடிகள், மருந்து, மரப்பால், உடற்பயிற்சி மற்றும் அறியப்படாத காரணங்களால் உருவாகலாம்.

ஒரு ஒவ்வாமைத் தூண்டலுக்கு வெளிக்காட்டப்பட்ட சில நிமிடங்களுக்குள் அல்லது பல மணிநேரங்களுக்குப் பிறகு பின்வரும் கடுமையான ஒவ்வாமை எதிர்வினை நோய்க்குறிகள் ஏற்படலாம்.

வாய்: அரிப்புணர்வு, உதடுகள் மற்றும்/அல்லது நாக்கு வீங்குதல்

சருமம்: அரிப்புணர்வு, தோலழற்சி, சிவத்தல், வீங்குதல்

நுரையீரல்*†: மூச்சு விடுவதில் சிரமம், இருமல், மூச்சிரைப்பு

தொண்டை*†: அரிப்புணர்வு, இறுக்கம், அடைப்பு, கரகரத்த குரல்

குடல்: வாந்தி, வயிற்றுப்போக்கு, தசைப்பிடிப்புகள்

இதயம்*†: பலவீனமான நாடித்துடிப்பு, தலைச்சுத்து, மயக்கம்

* EpiPen® ஆட்டோ-இன்ஜெக்ட்டர் ஆனது கடுமையான ஒவ்வாமை எதிர்வினைகளுடன் (அனாபைலேக்சிஸ்) தொடர்புடைய இறப்பைத் தடுப்பதற்கானது அல்ல.
† சில நோய்க்குறிகள் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பவையாக இருக்கலாம். வேகமாகச் செயல்படுங்கள்!

என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

EpiPen® ஆட்டோ-இன்ஜெக்ட்டர் ல் உள்ள மருந்தான எப்பிநெப்பிரின், கடுமையான ஒவ்வாமை எதிர்விளைவுகளுக்கான சிகிச்சைத் தேர்வாகும்.

மேலே பட்டியலிடப்பட்டிருக்கும் ஏதாவது நோய்க்குறிகள் தோன்றினால், கூடிய விரைவில் EpiPen® ஆட்டோ-இன்ஜெக்ட்டர் ஐச் செலுத்திக் கொள்ளுங்கள்.

வானத்திற்கு நீலம். தொடைக்கு செம்மஞ்சள்.

EpiPen® மற்றும் EpiPen® Jr ஆட்டோ-இன்ஜெக்ட்டர் களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்.

- செம்மஞ்சள் நிற முனை கீழ்நோக்கியிருக்க உறுதியாகப் பிடித்துக் கொள்ளவும்.
- **மேல்நோக்கி இழுப்பதன் மூலம் நீல நிறப் பாதுகாப்பு மூடியை அகற்றவும். வளைக்கவோ முறுக்கவோ வேண்டாம்.**

- **உங்களுக்கு ஒரு 'கிளிக்' சத்தம் கேட்கும் வரை, செம்மஞ்சள் நிற முனையை நடு-வெளிப்புறத் தொடையினுள் செலுத்தவும்.**
- பல விநாடிகளுக்குத் தொடையின் மீது பிடித்துக் கொள்ளவும்.

பாதுகாப்புக்காக ஊசி உள்ளிணைக்கப்பட்டுள்ளது

- ஊசி ஒருபோதும் வெளிப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, ஊசி உட்செலுத்தப்பட்ட பிறகு செம்மஞ்சள் நிற மூடி தானாகவே நீள்கிறது.

EpiPen® ஐ- பயன்படுத்திய பிறகு, நீங்கள் உடனடியாக மருத்துவக் கவனிப்பை நாட வேண்டும் அல்லது அவசரகாலநிலைச் சிகிச்சை அறைக்குச் செல்ல வேண்டும்.
அடுத்த 48 மணிநேரங்களுக்கு, நீங்கள் ஒரு உடல்நலப் பராமரிப்பு மையத்திற்கு அருகாமையில் அல்லது 911 என்ற எண்ணை அழைக்கக்கூடிய இடத்தில் தங்கியிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

EpiPen® மற்றும் EpiPen® Jr (எப்பிநெப்பிரின்) ஆட்டோ-இன்ஜெக்ட்டர் என்பவை, கடுமையான ஒவ்வாமை எதிர்வினை (அனாபைலேக்சிஸ்) வரலாற்றைக் கொண்ட தனிநபர்கள் உள்பட, கடும் ஒவ்வாமைக்கான (அனாபைலாக்டிக்) அதிகரித்த ஆபத்தைக் கொண்டவர்கள் எனத் தீர்மானிக்கப்பட்ட நோயாளிகளின் கடும் ஒவ்வாமை எதிர்வினைகளுக்கெதிரான அவசரகாலநிலைச் சிகிச்சைக்கானவையாக இருக்கின்றன. பொருத்தமான வேளைமருந்தின் அளவுத் தெரிவு, நோயாளியின் உடல் நிறைக்கேற்பத் தீர்மானிக்கப்படுகிறது.

EpiPen® மற்றும் EpiPen® Jr ஆட்டோ-இன்ஜெக்ட்டர் ஆகியவை அவசரகாலநிலை உதவிச் சிகிச்சைக்காக மட்டுமே வடிவமைக்கப்பட்டவையாகும். இவை, தொடரவேண்டிய மருத்துவ அல்லது மருத்துவமனைப் பராமரிப்புக்கான ஒரு மாற்று அல்ல. மருந்து செலுத்தப்பட்ட பிறகு, நோயாளிகள் உடனடியான மருத்துவக் கவனிப்பை நாட வேண்டும் அல்லது அவசரகாலநிலைச் சிகிச்சை அறைக்குச் செல்ல வேண்டும். அடுத்த 48 மணிநேரங்களுக்கு, நோயாளிகள் ஒரு உடல்நலப் பராமரிப்பு மையத்திற்கு அருகாமையில் அல்லது 911 என்ற எண்ணை அழைக்கக்கூடிய இடத்தில் தங்கியிருக்க வேண்டியது கட்டாயமாகும். இத்தயாரிப்புப் பொருள் உங்களுக்குச் சரியானது தானா என்பதை உறுதிசெய்வதற்கு, எப்பொழுதும் விபரச் சீட்டைப் படித்துப் பார்த்து, அதில் வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும். முழுமையான மருந்தளவு மற்றும் மருந்தளிப்புக்கான அறிவுறுத்தல்களுக்கு, உங்களுடைய தயாரிப்புப்பொருளின் பொதியில் உள்ள நுகர்வோர் தகவல் சிற்றேட்டைப் படிக்கவும்.

மேலதிகத் தகவல்களுக்கு அல்லது இந்தச் சுவரொட்டியின் அச்சிடக்கூடிய ஒரு வடிவத்தைப் பதிவிறக்கம் செய்வதற்கு, பின்வரும் நுகர்வோருக்கான இணைத்தளத்திற்குச் செல்லவும்: EpiPen.ca.

இந்த EpiPen® சுவரொட்டி, PAAB ஆமோதித்த APS-இல் இருந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டதாகும்.

EPIPEN®
(Epinephrine) Auto-Injectors 0.3/0.15mg
Trusted for over 25 years.

© 2015 Pfizer Canada Inc., Kirkland, Quebec H9J 2M5 • இலவச தொலைபேசி இலக்கம்: 1-877-EPIPEN1 (1-877-374-7361)
EpiPen®, EpiPen® Jr ஆகியவை Mylan, Inc. நிறுவனத்தால் பதிவுசெய்யப்பட்ட வணிகச்சின்னங்களாகும். இந்நிறுவனத்திற்கு முழு உரிமையான துணை நிறுவனமான Mylan Specialty, L.P., துணை-உரிமம் பெற்ற Pfizer Canada Inc., Kirkland, Quebec H9J 2M5 ஆகியவற்றுக்குப் பிரத்யேகமாக உரிமம் வழங்கியுள்ளது.

D000051645

Member R&D